Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.68/2017 PW-1**

Name : மங்கை
Father / Husband name : வேலாயுதம்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 27.09.2024

**Accused 1 and A2 Absent. Petition u/s 317 CrPC filed and allowed.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

நான் ஏற்கனவே 28.08.2024 அன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தேன். என்முன் காண்பிக்கப்படும் ஆவணம் நான் தேவராஜ்க்கு எழுதிகொடுத்த கிரைய ஒப்பந்தம். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள 1, 2, 3 வது பக்கங்களிலுள்ள கையொப்பங்கள் என்னுயடைது தான். 4 வது பக்கத்திலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. 4வது பக்கத்திலுள்ள என்னுடைய கையெழுத்தை மோசடியாக தேவராஜ் போட்டுக்கொண்டு மீதி அச்சார உடன்படிக்கையில் கண்டுள்ள பணத்தை பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொண்டார்கள். ரூ.50,000/- மட்டும் தான் நான் பெற்றுக்கொண்டேன். **06.11.1991 தேதியிட்ட கிரைய அச்சார உடன்படிக்கை சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 4 வது ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் என்பதாலும் அசலை தாக்கல் செய்யாததாலும் எதிரி தரப்பு ஆட்சேபனையுடம் குறியீடு செய்யப்படுகிறது )**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.